Registered as a NewsPaper பக்கங்கள் 06 விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM PeoplesDaily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 05 (17-02-1992) திங்கட்கிழமை ஓசை: 364

## 3000 பாடசாலைகள் மூடப்படும் அபாயம்

நாடு பூராகவும் ஆண்டு ஐந்துவரை வகுப்புகள் உள்ள 3000 பாடசாலைகளை மூடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம் என்று ஜாதிக்க அத்தியாபன சேவிக சங்கமய (தேசிய கல்விச் சேவைகள் சங்கம்) அரசை எச்சரித்துள்ளது. இப்பாடசாலைகளில் மாணவர்கள் அனுமதி பெறுவது 15 விகிதம் குறைந்துள்ளது என்று சங்கம் தெரிவித்துள்ளது. மேற்படி சங்கம் நடத்திய மதிப்பீடு ஒன்றின்படி சுகாதார வசதிகள், நூல் நிலையம், நீர், தளபா (6 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு எதிரான போருக்கு இந்தியா படைகளை அனுப்புமா?

## சாத்தியமில்லை என்கிறது சிறிலங்கா

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர்களைக் கைதுசெய்யும் நோக்கத்துடன் இந்திய இராணுவம் இலங்கைக்கு வரும் சாத்தியப்பாடுகள் இல்லையென சிறிலங்கா அரசு தெரிவித்துள்ளது. இதேவேளை இவ்வாறான ஒரு கோரிக்கையை இந்திய அரசு விடுமென தாம் எதிர்பார்க்கவும் இல்லையென சிறிலங்கா அரசு மேலும் தெரிவித்தது.

அண்மையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இந்தியாவின் இராணுவத் தலையீடு சம்பந்தமாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் பொழுது மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

"விடுதலைப் புலிகளின் தலைவர்களைக் கைது செய்யும் நோக்கத்துடன் இந்திய அரசு தனது படைகளை இலங்கைக்கு அனுப்புமா? அப்படியான ஒரு கோரிக்கையை இந்தியா விடுக்கும் பட்சத்தில் சிறிலங்கா அரசின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்? இவ்வாறு விடுக்கப்பட்ட ஒரு கேள்விக்கு ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் பதிலளிக்கையில் "அப்படியான ஒரு கோரிக்கையை இந்தியா விடுக்குமென நாம் எதிர்பார்க்கவில்லை" என்று தெரிவித்தார்.

இந்தக் கேள்விநேரத்தில் குறுக்கிட்ட அமைச்சரவைப் பேச்சாளர் திரு. ரணில் விக்கிரமசிங்கா "சட்ட விவகாரத்தில் இராணுவ நடைமுறைகளை தொடர்புபடுத்த முடியாது" எனக் குறிப்பிட்டார்.

## வீரச்சாவு

லெப். ஈழமணி

மட்டக்களப்பு ஆறாம் கட்டையில் கடந்த வெள்ளியன்று (6-ஆம் பக்கம் பார்க்க)

## நாளை வெளிவரும்

'ஈழநாதம்' இரண்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் நாளைய பத்திரிகையில் வெளிவரும்.

## யாழ்ப்பாணத்தில் இந்திய உளவுப்படை

(கொழும்பு)

இந்தியப் புலனாய்வுத் துறையான 'றோ' அமைப்பைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்தில் ஊடுருவியிருப்பது எமக்குத் தெரியாது என்று கடந்த வியாழனன்று நடந்த செய்தியாளர் மாநாட்டில், கேள்வி ஒன்றுக்குப்பதிலளித்த கேணல் சரத்முனசிங்கா தெரிவித்தார்.

பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள யாழ். போதனா வைத்தியசாலையில் எவ்வாறு குண்டு வெடிப்புச்சம்பவம் நிகழ்ந்தது என்பதை நாம் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## திருமலையில்

## 4கிராமங்கள் சுற்றிவளைப்பு; இருவர் பலி! பலர் காயம்!!

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள முட்டிச்சேனை, வாழைத்தோட்டம், வெருகல் முகத்துவாரம், கல்லடி ஆகிய நான்கு கிராமங்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டன. அங்கு அவர்கள் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் கணபதிப்பிள்ளை திருச்செல்வம் (இலங்கை முகத்துவாரம்), சினத்தம்பி குமரேசலிங்கம் ஆகிய இரண்டு அப்பாவித் தமிழ் மக்கள் பலியாகினர். பத்துக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

20 வீடுகள், இரண்டு கரைவலை வாடிகள், மூன்று கடைகள் என்பன இராணுவத்தால் எரிக்கப்பட்டன. இரண்டு இலட்சம் ரூபாவிற்கு மேல் (6-ஆம் பக்கம் பார்க்க)

## 3 யுவதிகள்கடத்தல் முயற்சி 5 அரசியல்வாதிகள் கைது

(மாத்தளை]

நாவுல பொலிஸ் பிரிவிலுள்ள பிலிகொட்டுகொல்ல என்னும் இடத்தில் வைத்து மூன்று யுவதிகளை கடத்திச் செல்ல முயன்றதாக ஐந்து பிரதேச சபை உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 30 ஆம் திகதி இவர்கள் ஐவரும் மூன்று யுவதிகளை வான் ஒன்றில் கடத்திச் செல்ல முயன்றபோது பொதுமக்களால்சுற்றிவளைக்கப்பட்டனர் எனினும் இவர்கள் தப்பி ஓடி விட்டனர்,

பின்னர் இவர்கள் தம்புள்ளவில் வைத்து பொலிசாரினல் கைது செய்யப்பட்டனர். அப்பொழுது இவர்கள் பிரதேசசபை உறுப்பினர்கள் எனத்தெரியவந்ததாக அறியப்படுகிறது.

## யாழ். நகர்மீது நேற்று அதிகாலை பலத்த எறிகணை வீச்சு

(குருநகர்)

நேற்றுஞாயிற்றுக்கிழமைஅதிகாலை 4 மணியளவில் யாழ். நகரப் பகுதிக் கரையோரங்களான குருநகர், பண்ணை, கொட்டடி, கண்ணாபுரம், நாவாந்துறைப் பகுதிகள்மீது பலத்த எறிகணைத்தாக்குதல்களை மண்டைதீவில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

இதன் விளைவாக அப்பகுதிகளில் நித்திரையில் இருந்த பொதுமக்கள் திடுக்குற்று எழுந்து குழந்தைகளையும், வயோதிபர்கள், இயலாதவர்களையும், கைகளுக்கு அகப்பட்ட பொருள்களையும் எடுத்துக் கொண்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயர்ந்து சென்றனர்.

அவ்வாறு சென்றவர்கள் பாடசாலைகள், கோயில்கள், தேவாலயங்களில் தஞ்சம் அடைந்தனர்.

யாழ் பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் நேற்றுக்காலை 50 குடும்பங்கள் தஞ்சமடைந்திருந்தன. (6ஆம் பக். பார்.)

## ஷாம்லி குணவர்த்தனா; இடைநிறுத்த உத்தரவு கட்சியினால் வாபஸ்

(கொழும்பு)

சிறிலங்கா மகாஜனக்கட்சி பிரதித் தலைவர் ஷாம்லி குணவர்த்தனாவை கட்சியிலிருந்து இடைநிறுத்தி வைக்க வழங்கப்பட்ட உத்தரவை வாபஸ்பெறஅக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது,

கட்சியின் தலைவர் ஒஸி அபய குணவர்த்தனா தலைமையில், கடந்த 4ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

காரணம் தெரிவிக்காமலே குணவர்த்தனா முதலில் கட்சியிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்டார். சிறிலங்கா அரசியல் அமைப்புச் சட்டத்தை ஆக்கியவர்களான லலித் அத்துலத்முதலியும், காமினி திஸநாயக்காவும். ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எதிராக குற்றச்சாட்டு மனுவைக் கொண்டுவரத் தகுதியற்றவர்கள் என்று அர்த்தப்பட ஷாம்லி கடந்த செப்டம்பர் திணமின (6-ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பிமலையில் மோதல்; இராணுவம் பின்வாங்கியது

### புலிகள் தரப்பில் ஒருவர் வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டம் குடும்பி மலைப் பகுதியில் பதுங்கியிருந்த சிறிலங்கா இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடந்த வியாழனன்று காலை திடீர் மோதல் ஏற்பட்டது.

இங்கு ஏற்பட்ட கடும்மோதலில் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத இராணுவத்தினர் தமது முகாமிற்குள் பின் வாங்கிச் சென்றனர்.

இந்த மோதலில் அல்வின் அல்லது மதுராந்தகன் (நடராஜா இந்திரன், செங்கலடி கொடுவாமடு) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## பாராளுமன்றத் தெரிவுக்குழு

## யாழ். வந்து நிலைமையை நேரில் அவதானிக்கலாம்

(கொழும்பு)

"இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண்பதற்கு என்று நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழு யாழ்ப்பாணம் வரலாம். இக் குழுவினரை வரவேற்க நாம் தயாராகவே இருக்கிறோம்" இவ்வாறு யாழ்ப்பாணம் வந்த "குவேக்கர்ஸ்" சர்வதேச சமாதானக் குழுவினரிடம் தமிழீழ விடுதலைப் புலிகள் கூறியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வொன்றைக் காண அரசு விரும்பினால் நாங்கள் அதற்குத் தயாராக இருக்கிறோம் என்றும் இனப்பிரச்சினையைத்தீர்த்து வைப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் மங்கள முனசிங்கா தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக் குழுவினர் யாழ்ப்பாணம் வந்து எமது மக்களின் அபிலாஷைகளை நேரில் அறிந்து செல்லலாம் என்றும் (6-ஆம் பக்கம் பார்க்க]

கிளிநொச்சி மாவட்ட
விவசாயிகள் கவனத்திற்கு

நீர்ப்பாசனத் திணைக்கள

## அறிவித்தல்

எனது பிரிவின்கீழ் பராமரிக்கப்படும் கீழ்வரும் குளங்களில் நீர்விநியோக பராமரிப்பு வேலைகளைத் திறம்பட செய்விப்பதற்கு அந்தந்த குளங்களின்கீழ் விவசாயம் செய்யும் கமக்காரர்கள் அடங்கிய ''கமக்காரர் குழுக்கள்'' (Farmers Organization) தெரிவு செய்யவேண்டியுள்ளதால் தயவுசெய்து இந்த அட்டவணையில் கொடுக்கப்பட்ட இடங்களில் கூடி உங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு உதவுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

| குளத்தின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் | திகதி | நேரம் |
|---|---|---|---|
| 1, புதுமுறிப்பு | புதுமுறிப்பு நீர்ப்பாசன விடுதி | 20-02-1992 | காலை 8 30 |
| 2. கனகாம்பிகைக்குளம் | இரணைமடு நீர்ப்பாசன விடுதி | 21-02-1992 | காலை 8.30 |
| 3. பிரமந்தல் ஆறு | பிரமந்தல்ஆறு நீர்ப்பாசன விடுதி | 24-02-1992 | காலை 8.30 |
| 4 கல்மடு ) 5. பெரியகுளம்) கண்டாவளை) | கல்மடு நீர்ப்பாசனவிடுதி | 24-02-1992 | காலை 10 30 |

வில்சன் வீதி,
கிளிநொச்சி,
05-02-1992 (சி/3895)

எந்திரி சு சிவகுமார்
நீர்ப்பாசன எந்திரி
கிளிநொச்சிப் பிரிவு

---

வடமராட்சி
உடல் ஊனமுற்றோர் சங்கம்

## பொதுக்கூட்டம்

இன்று (17-2-92) நடைபெறவிருந்த வடமராட்சி உடல் ஊனமுற்றோர் சங்க பொதுச்சபைக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களினால் அடுத்த (மார்ச்) மாதம் 2ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனை சகல அங்கத்தவர்களுக்கும், தொண்டர் நிறுவனங்களுக்கும் அறியத் தருகிறோம்.

செயலாளர்

சதாபொன்ஸ்
அல்வாய் கிழக்கு.
அல்வாய்.

(சி-3932)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 24 -- 07 -- 1931

உதிர்வு 27 -- 02 -- 1991

திருமதி
### பொன்னையா அசுபதி

திதி:- 17-02-1992

ஆண்டொன்று போனாலும்
ஆறாது எம்துயரம்
பாசமிகு அன்னையாக
பாசமுடன் வளர்த்திரே
தீருமோ எம் சோகம்
திரும்பிவர மட்டீரோ

அன்னாரது ஆண்டுத் திவசத்தில் பங்குபெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

359/3, சோபால் லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி-3931)

---

# பட்டதாரி ஆசிரியர் வெற்றிடம்; பரீட்சை மூலம் நியமனம்

## பொறுப்புக்கள் மாகாணசபையிடம்

நாட்டிலுள்ள பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு பட்டதாரி ஆசிரியர்களை பரீட்சை மூலம் நியமிக்கும் பொறுப்பை மாகாண சபைகள் ஏற்றுக் கொள்ளும் என ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அறிவித்துள்ளார்.

இதுவரை காலமும் பட்டதாரி ஆசிரியர்களை மத்திய அரசாங்கமே நியமனம் செய்து வந்தது. ஒவ்வொரு மாகாண சபைக் கல்வி அமைச்சும் தமது நிதியைப் பொறுத்து தமது பகுதிகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க ஜனாதிபதி அங்கீகாரம் அளித்துள்ளார்.

கடந்த புதன் கிழமை கல்வி அமைச்சு மாகாண அமைச்சு அதிகாரிகள் கலந்து கொண்ட மாநாட்டில் ஜனாதிபதி கலந்து கொண்டு இதனைத் தெரிவித்தார். நாட்டிலுள்ள பாடசாலைகளில் இனிமேல் வழங்கப்படும் சகல ஆசிரிய நியமனங்களும் பரீட்சைகள் மூலமே வழங்கப்படும். இதுவரை காலமும் தொண்டர்ஆசிரியர்நியமனங்கள் கல்வித்தராதரத்தினை கொண்டு வழங்கப்பட்டு வந்தன. இனிமேல் அவ்வாறில்லாமல் பரீட்சைகள் மூலமே அவர்களது தகுதி காணப்பட்டு தெரிவு செய்யப்படுவார்.

அத்துடன் நிதியை பாடசாலைகள் தமது தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளும் வகையில் திருத்தங்களை கொண்டுவருமாறும் ஜனாதிபதி மாநாட்டில் கலந்து கொண்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

## திருமலையில் 400 ஆசிரியர் நியமனம்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் நானூறு தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

பெப்ரவரி 1,2 ஆம் திகதிகளில் இடம்பெற்ற நேர்முகத் தெரிவுக்குப் பிறகு, கடந்த பெப்ரவரி 3 ஆம் திகதி முதல் தொண்டர்ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டன.

## செயலகத்தில் சைக்கிள் திருட்டு

(கொழும்புத்துறை)

யாழ். செயலகத்தில் உள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் விடப்பட்ட புத்தூர் மேற்கைச் சேர்ந்த திரு. ம. விநாசித்தம்பியின் சைக்கிள் அண்மையில் காணாமல் போயுள்ளது.

இத் திருட்டுச் சம்பந்தமாக இவர் செயலக முன்னால் உள்ள காவல்துறையிடம் முறைப்பாடு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## லயன்ஸ் கழகம் புலமைப் பரிசில்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இருந்து பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்காக புலமைப் பரிசில் திட்டமொன்றை சாவகச்சேரி லயன்ஸ் கழகம் ஆரம்பித்துள்ளது இப்புலமைப் பரிசில் நிதி அண்மையில் நடைபெற்ற மேற்படிகல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றிய ஒன்றுகூடல் வைபவத்தில் வைத்து சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் திரு. எஸ். நவரத்தினத்தினால் கல்லூரி அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானத்துறைகளில் தனித்தனி ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுப் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களுக்கே இப்புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது. (மு)


## ஹேமா பிரேமதாசா ஜெனிவா பயணம்

(கொழும்பு)

கிராமப் புற பெண்களின் பொருளாதார முன்னேற்றம் பற்றிய சர்வதேச மாநாடொன்றில் கலந்து கொள்வதற்காக திருமதி ஹேமா பிரேமதாசா ஜெனிவா பயணமாகினார். இம் மாநாடு இம் மாதம் 26-ம் 27-ம் திகதிகளில் ஜெனிவாவில் நடைபெறவிருக்கின்றது இம் மாநாட்டில் பல நாடுகளின் முதல் பெண்மணிகள் கலந்து கொள்ள இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:
14- 05- 1952

அந்நிய மண்ணில்:
17- 02- 1991

பிரான்சில் அகால மரணமடைந்த

### கந்தையா தெட்சனாமூர்த்தி

(தெட்சனா)

அரும்பாகி மொட்டாகி மலரான உன்னைக்
காயாகிக் கனியாக விட்டார்களில்லை
துரும்பாக உனை நினைத்து துட்டனின் செயலால்
கரும்பான உனை இழந்து கண்ணீரில் நனைந்தோம்
உங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

171/3 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

அம்மா, சகோதரன்,
சகோதரிகள், மருமக்கள்.

(2214)

---

## நினைவு கூருகின்றோம் 1992 - 02 - 17

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் சாவாறில் எதிர்பாராத வெடி விபத்தில் எம்மைப் பிரிந்த

சுமன் [துரைராசா ஜெயக்குமார் - காரைதீவு அம்பாறை]

சுதர்சன் [ஐயம்பெருமாள் கருணாகரன் - பனங்காடு அக்கரைப்பற்று]

1988ஆம் ஆண்டு அலிஒலுவவில் சிறிலங்கா இராணுவத்தால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய

★ தர்மலிங்கம் தங்கத்துரை - [ஈச்சிலம்பத்தை மூதூர்]

1989ஆம் ஆண்டு நிந்தவூரில் தேசவிரோதிகளால் கொலை செய்யப்பட்ட

நசீர் [சம்சுதீன் நசீர் - ஒலுவில்]

முல்லைத்தீவில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட மாமூலையைச் சேர்ந்த இளைஞன்

1991ஆம் ஆண்டு கொண்டச்சியில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலின் போது வீரச்சாவெய்திய

மேஜர் ராதாரவி [சி. சிவபாலன் - 108, பாரதி வீதி, முழங்காவில்]

மேஜர் சூரி [கு. நகுலேஸ்வரன் - 35, உட்சன் வீதி வட்டக்கச்சி, கிளிநொச்சி]

கப்டன் துரைமணி [க, தவராசா - 2ஆம் பண்ணை, செட்டி குளம், வவுனியா]

லெப். ஏகாம்பரம் [மு. மகாலிங்கம் - 12ஆம்கட்டை, மாளிகைப்பிட்டி, முருங்கன், மன்னார்]

ஞானமுத்து [ஜோன் பற்றிக் அந்தோனி- பள்ளிமுனை, மன்னார்]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(சி-3930)

# எல்லையைக் கடக்கப்போவதாக ஜே. கே. எல். எப். மீண்டும் அறிவிப்பு

(டில்லி)

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியினர் அடுத்தமாதம் இருபத்து மூன்றாம் திகதியன்று ஊர்வலமாக பாகிஸ்தான் - இந்திய எல்லையைக் கடக்கப் போவதாக மீண்டும் அறிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் - இந்திய எல்லையில் இருக்கும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைக் கடந்து ஊர்வலமாகச் செல்ல இருப்பதாக முன்னணியினர் அறிவித்துள்ளனர்.

கடந்த பதினொராம் திகதியன்றும் எல்லை தாண்டும் பேரணியை நடாத்த ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி முயற்சி மேற்கொண்டதும் அதனைத் தடுக்க பாகிஸ்தானிய இராணுவமும், பொலிசாரும் துப்பாக்கிப் பிரயோகம், கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்ததும் தெரிந்ததே. பாகிஸ்தானிய படையினரின் தாக்குதல்களால் இருபதுக்கும் மேற்பட்ட காஷ்மீரியர் கொல்லப்பட்டதும் நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்ததும் தெரிந்ததே. பாகிஸ்தான் - இந்திய எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் பதற்றம் நிலவியதும் குறிப்பிடத்தக்கது.

## இந்திய நிலைப்பாட்டிற்கு குவைத் ஆதரவாம்

(குவைத்)

ஜம்மு- காஷ்மீர் மாநிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு குவைத் அரசு ஆதரவு தெரிவித்து உள்ளதென இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி கூறியுள்ளார்.

குவைத்திற்கு தற்போது விஜயமொன்றை மேற்கொண்டிருக்கும் திரு.மாதவ்சிங் சோலங்கி குவைத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தினார்.

குவைத்தின் துணைப் பிரதமரும், வெளியுறவு அமைச்சருமான சேயிக் சலாம்அல்சபா இந்தப் பிரச்சினையை பாகிஸ்தானும், இந்தியாவும் இருதரப்பாக தீர்த்துக் கொள்ள வேண்டுமென வலியுறுத்தியதாகவும், இதே நிலையை பாகிஸ்தானிடமும் அவர் தெரிவித்திருப்பதாகவும் மாதவ்சிங் சோலங்கியிடம் கூறியுள்ளாரென தெரியவருகிறது.

## பஞ்சாப்பில் பல இடங்களில் குண்டு வெடிப்புக்கள்

(டில்லி)

பஞ்சாப்மாநிலத்தில் அமிர்தசரஸ் நகருக்கு வெளியே ரயில்வே தண்டவாளமொன்றில் குண்டு வெடித்தது. பம்பாயிலிருந்து அமிர்தசரஸ் நோக்கி வந்து கொண்டிருந்த எக்ஸ்பிரஸ் வண்டி அவ்விடத்தைக்கடப்பதற்குசிலநிமிடங்களுக்கு முன்பாக இந்தக் குண்டு வெடிப்பு நடந்தது.

எனினும் ரயில் தடம்புரளவில்லை. அத்துடன் இவ்விபத்துக் காரணமாக எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை.

அமிர்தசரசில் ஜாலியன் வாலாபாக் அருகே மற்றுமொரு குண்டுவெடிப்பு நடந்ததில் ஒரு கட்டடம் சேதமடைந்தது.

பஞ்சாப்பில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலை புறக்கணிக்கக் கோரும் சக்திகளே இக் குண்டு வெடிப்புகளுக்குப் பொறுப்பாக இருக்கலாம் எனப் பொலிசார் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## குவைத் அரச குடும்ப அங்கத்தவர்குத்திக்கொலை

குவைத்தை ஆளும்அரச குடும்ப அங்கத்தவர் ஒருவர் அவரது பணிப்பெண் ஒருவரினால் குத்திக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கெய்ரோவில் இடம்பெற்றது. தற்போது கைது செய்யப்பட்டிருக்கும் 42வயதான பணிப்பெண் ஷீகா லப்தீகாஅப்துல்லா ஜாபர்அல் சபாவை 10 தடவைகள் கத்தியால் குத்தினார்.

பிலிப்பைன்ஸுக்குச் செல்ல தன்னை அனுமதிக்க மறுத்ததாலேயே அவர் இப்படி செய்ததாக கூறப்படுகின்றது. பணிப்பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட 45வயதான ஷீகா லதீபா குவைத் மன்னரின் சகோதரர் ஒருவரின் மாஜி மனைவி ஆவார்.

## சைக்கிள் திருட்டு

(புங்குடுதீவு)

நிவாரணம் பெறச் சென்றவரின் சைக்கிள் திருடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவாசல் வீதியில் உள்ள புங்குடுதீவு, நயினாதீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிளையொன்றில் நிவாரணப் பொருள்கள் பெறச் சென்றிருந்த புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ந. சபாரெத்தினம் என்பவர் 15 ஆம் திகதி சனிக்கிழமை மேற்படி கிளையின் முன்னால் சைக்கிளை நிறுத்தி விட்டு நின்ற போதே அவரது 'கீறோ' சைக்கிள் திருடப்பட்டது. அத்துடன் அவரது பங்கீட்டு அட்டையும் சைக்கிளில் வைக்கப்பட்டிருந்ததனால் அதுவும் சைக்கிளுடன் சேர்ந்து திருடப்பட்டுள்ளது. (22)

# அமெ. இராணுவ இரகசியம் ஈராக்கிற்கு விற்பனை

### - நீதித்துறை விசாரிக்கிறது

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் நீதித்துறை இராணுவ இரகசியங்கள் சில ஈராக்கிற்கு கடத்தப்பட்டுவிற்பனை செய்யப்பட்டது சம்பந்தமான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அமெரிக்க அரசுத்துறை அதிகாரிகள் சிலர் அங்கீகாரம் பெற்ற ஆயுதவிற்பனையாளர்களின் ஒத்துழைப்போடு இந்த இராணுவ இரகசியங்களை நாடுகடத்தியதாக வாஷிங்டன் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுபற்றிய புலனாய்வு நடத்திய அதிகாரிகள் அமெரிக்காவின் இராணுவ பொலிஸ் சேவையில் அமர்த்தப்பட்டிருந்த சில அதிகாரிகள் இச் செயலில் சம்பந்தப்பட்டிருப்பதைக் கண்டு பிடித்துள்ளனர்.

அமெரிக்க காங்கிரசில் இது தொடர்பான தகவல்கள் வெளியானதையடுத்து நீதித்துறை விசாரணைக்கு இந்த விவகாரம் உட்படுத்தப்பட்டுள்ளது.

## பான் எம் விமானக் குண்டு வெடிப்பு

## சந்தேக நபர்கள் மீது லிபியாவில் விசாரணை

(திரிப்போலி)

பான் எம் விமானத்தில் 1988-ம் ஆண்டில் குண்டு வைத்ததாக அமெரிக்கா சந்தேகிக்கும் இரு லிபிய நாட்டவர்களும் லிபியாவின் நீதிமன்றம் ஒன்றினால் விசாரிக்கப்படவுள்ளனர். திரிப்போலியில் நாளை செவ்வாயன்று இவ் விசாரணை ஆரம்பமாகவுள்ளது. சந்தேகநபர்கள் இருவரும் லிபியாவின் உளவாளிகள் என்றும், பான் எம் விமானத்தில் குண்டு வைப்பதற்கு இவர்கள் உதவினார்கள் என்றும் மேற்கு நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன. இந்த விசாரணைக்கு சுப்ரீம் கோட் நீதிபதிஒருவர் தலைமைஏற்கிறார்.

இதனிடையே ஐக்கிய நாடுகள் சபை தனக்கு எதிராக பொருளாதாரத்தடை நடவடிக்கைகள் விதிப்பதை தடுக்கும் முகமாகவே லிபியா இந்த விசாரணைக்கு உத்தரவிட்டிருப்பதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## மூன்று இஸ்ரேலியர்கள் பாலஸ்தீனியரால் கொலை

(டெல்அவிவ்)

இஸ்ரேல் இராணுவத்தின் பயிற்சி முகாம் ஒன்றினுள் கத்திகளையும் கோடரிகளையும் ஏந்திச்சென்ற பாலஸ்தீனியர் அங்கிருந்த இராணுவததினர் மீது தாக்குதல் நடததியதில் மூவர்கொல்லப்பட்டனர். மேலும் நால்வர் படுகாயமடைந்தனர் ஜோர்தன் மேற்குக்கரைக்கு சமீபமாக இருந்த முகாமொன்றில் நேற்று முன்தினம் இச் சம்பவம் இடம்பெற்றது.

இதன் பின்னர் இஸ்ரேலிய இராணுவ கெலிக்கப்டர்களும் விமானங்களும் தெற்கு லெபனானிலுள்ள பாலஸ்தீனிய அகதிமுகாம் மீது தாக்குதல் நடத்தியுள்ளன.

## உக்ரெயினிலிருந்து விமானத்துடன்

## விமானிகள் ஆறு பேர் ரஷ்யாவிற்கு ஓட்டம்

(மொஸ்கோ)

முன்னாள் சோவியத் படையைச் சேர்ந்த ஆறு விமான ஓட்டிகள் தங்களது போர் விமானங்களை எடுத்துக் கொண்டு உக்ரேனை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

உக்ரேனில் தங்கியிருந்து உக்ரேன் புதிய குடியரசுக்கு விசுவாசம் தெரிவித்துப் பதவிப் பிரமாணம் எடுக்கத் தாங்கள் விரும்பவில்லை என்று இவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

உக்ரேன் அரசின் உத்தரவை மீறி விமானங்களுடன் வெளியேறிய இவர்கள் ரஷ்ய எல்லைக்குள் இருக்கும் சிமோலன்ஸ்க் இராணுவ விமானத் தளத்துக்குள் இறங்கியிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

## இடைக்கால நடுவர் மன்ற

# தீர்ப்பின் அடிப்படையில் பேச்சு நடத்த வேண்டும்

(சென்னை)

காவிரி நீர் பிரச்சினையில் நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை செயற்படுத்தவேண்டும் என்ற அடிப்படையில் புது டில்லிப்பேச்சுவார்த்தைகள் அமைய வேண்டும் என்று சென்னையில் கூடிய அனைத்துக் கட்சி கூட்டம் முடிவு செய்துள்ளது.

இன்று புதுடில்லியில் கர்நாடக முதல்வர் பங்காரப்பாவிற்கும், தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கும் இடையே பிரதமர் பி. வி நரசிம்மராவ் முன்னிலையில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தையை முன்னிட்டு சென்னையில் நேற்று அனைத்துக் கட்சிக் கூட்டமொன்றை தமிழக முதல்வர் ஜெயலலிதா கூட்டியிருந்தார். புதுடில்லிப் பேச்சுவார்த்தைகளுக்கு வரவேற்பு தெரிவித்த அனைத்துக் கட்சிக் கூட்டம் ஏற்கனவே இதற்கு முன்பாக நடந்த இரண்டு அனைத்துக் கட்சிக் கூட்டங்களிலும் எட்டப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் அமைய வேண்டுமென முதல்வர் ஜெயலலிதாவைக் கேட்டுக் கொண்டது.

## 1,17,000 கன்னடத் தமிழர் தமிழகம் வந்துள்ளனர்

(சென்னை)

கர்நாடகத்தில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட வன்முறைகளா சுமார் 1 லட்சத்து 17 ஆயிரம் தமிழ் மக்கள் உடைமைகளை இழந்து தமிழகம் வந்ததாக தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா குறிப்பிட்டார்.

காவிரி நீர் தொடர்பாக பிரதம மந்திரி முன்னிலையில் தமிழக கர்நாடக முதலமைச்சர்கள் நாளை நடத்தவிருக்கும் பேச்சு வார்த்தைகளை முன்னிட்டு நேற்றுமுன்தினம்கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியப் பிரதமரின்வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு, நாகரிகமான அரசியல் மற்றும் நிர்வாக நடைமுறையைக் கருத்தில் கொண்டு தமிழக அரசின் நிலையை மீண்டும் எடுத்துரைக்க இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதாக செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

சர்வகட்சி மாநாட்டில் தி. மு. க. வும் பாட்டாளி மக்கள் கட்சியும் கலந்து கொள்ளவில்லை.

## காஷ்மீர் மக்களுக்கு பாக். செய்தது துரோகம்

### அஹமத்மிர்

(ஸ்ரீநகர்)

இந்தியாவின் ஆட்சிக்குட்பட்ட காஷ்மீருக்குள் தனது ஆதரவாளர்கள் பிரவேசிப்பதற்கு நடத்திய யாத்திரையை செவ்வாயன்று தடுத்து நிறுத்த முயன்ற பாகிஸ்தான் அரசாங்கம் தங்களுக்கு துரோகம் இழைத்துள்ளதாக காஷ்மீரின் சுதந்திரத்துக்கு ஆதரவான காஷ்மீர் தீவிரவாதக்குழு ஒன்று குற்றம் சாட்டியுள்ளது.

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி இராணுவக் கொமாண்டரான அஹமத்மிர் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீரின் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் நண்பன் எனக் கூறிக் கொள்ளும் பாகிஸ்தான் இத்தடையை விதித்தது எங்களின் முதுகில் குத்தியதற்கு சமமானதென தாங்கள் கருதுவதாக அஹமத்மிரின் அறிக்கை கூறுகிறது.

## பக்தாத்தில் ஆர்ப்பாட்டம்

வளைகுடாப்போரின்போது பதுங்கு குழியில் அமெரிக்க விமானங்கள் போட்ட குண்டுகளினால் கொல்லப்பட்ட சுமார் முந்நூறு பேரின் ஓராண்டு நினைவாக பெண்கள் அழுது புலம்பியபடி ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தியுள்ளனர். பக்தாத் நகரின் தெருக்களில் நடத்தப்பட்ட இந்த ஊர்வலத்தின் போது கறுப்பு ஆடைகள் அணிந்த பெண்கள் இறந்தவர்களின் உருவப்படங்களையும் எடுத்துச் சென்றனர்.

# நாங்கள் சித்திரவதைக்கு உள்ளாகினோம்

# எங்கள் வாக்குமூலங்கள் ஏற்புடையதல்ல

## ராஜீவ்கொலை சந்தேகநபர்கள் மனு தாக்கல்

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக தடுப்புக் காவலில் வைக்கப்படடிருக்கும் சநதேக நபர்கள் தாம் கடும் சித்திரைவதைக்குட்படுத்தப்படடு வருவதாக குற்றம் சாடடி மனுக்களைச் சமர்ப்பித்து வருகின்றனர்.

இந்த வழக்குத் தொடர்பாக சைது செயயப்பட்டிருக்கும் நளினி கடந்த திங்களன்று சென்னை விசேட நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள மனுவில் அதிகாரிகள மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

சென்னை புலனாய்வுத்துறை அலுவலகமான மல்லிகைக்கு முதற் தடவையாகக் சடந்த வருடம் ஜூன் மாதம் 14 ஆம் திகதி நான் அழைத்துச் செல்லப்படடபோது வானில் வந்த பொலிசார் தகாத முறையில் நடந்து கொண்டனர். மல்லிகை அலுவலகத்திற்குள் நான் நுழைந்ததுமே கொலைகாரி வந்து விட்டாள் என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிஒருவர் கூறினார். தன்னைச் சுற்றி வளைத்து 30 பொலிசார் நின்று கெட்டவார்த்தைகளால் வசைபாடினர். நன் தாக்கப்பட்டதுடன் தூங்க அனுமதிக்கப்படவில்லை. என்னைத் தாக்கியதனால் எனது கன்னங்களும் பின்புறமும் வீங்கியது நான் கர்ப்பிணி என்பதனால் பல தடவைகள் வாந்தி எடுத்தேன். வாந்தியின் மேலேயே தூங்க நிர்ப்பந்திக்கப்பட்டேன். பல நாட்கள் எனக்கு உணவு வழங்கப்படவில்லை. அநேகமான காலம் நான் மயக்க நிலையிலேயே இருந்தேன். எனது கையொப்பங்கள் வெற்றுத்தாளில் பெறப் பட்டன. மத்திய புலனாய்வுத்துறை பணியகத்தினர் தயாரித்து வீடியோவில் பதிவு செய்யப்பட்டன. அவர்கள் கூறியதைச் சொல்லுமாறு நான் நிர்ப்பந்திக்கப்பட்டேன். பயம் அச்சுறுத்தல் காரணமாக வெற்றுத் தாள்களில் கைச்சாத்திட்டேன். அவர்கள் கூறியதை நான் சொன்னேன். நீதிமன்றிற்கு அழைத்து வரப்படும் போதெல்லாம் எதுவும் சொல்லக் கூடாது என நான் பயமுறுத்தப்பட்டேன் அப்படிச் சொன்னால் உன்னை அடிப்போம் என்று அவர்கள் பயமுறுத்தினர் என விசேட நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவில் நளினி தெரிவித்துள்ளார்.

மேலும் குழந்தை பிரசவித்ததினால் எனது உடல் நிலை மோசமடைந்துவருகிறது. நான் விரைவில் இறந்து விடுவேன் என நம்புகிறேன். நான் இறந்தால் எனது கண்ணையும் சிறுநீரகத்தையும் செங்கல் பட்டு ஆஸ்பத்திரிக்கு வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே மற்றொரு சந்தேகநபரான முருகன் தனது மனுவில் 'நான் வழங்கியதாக கூறப்படும் வாக்கு மூலத்தை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளக் கூடாது. இதில் உண்மையில்லை எனத்தெரிவித்துள்ளார்.

நளினியின் தாயார் பத்மாவும் மற்றொரு சந்தேக நபரான பேரறிவாளன் என்பவரும் தமது மனுவில் தாம் நீதிமன்றத்திற்கு கையளித்ததாக கூறப்படும் வாக்குமூலங்கள் நிர்ப்பந்தத்தின் பேரிலேயே எடுக்கப்பட்டவை. எனவே நீதிமன்றம் அவற்றை செல்லுபடியற்றதாகக் கருத வேண்டும் எனத்தெரிவித்துள்ளார்.

## 1990-ல்கனடாவில்அடைக்கலம் இலங்கையரே அதிகம்

(ஒட்டாவா)

கனடாவில் புகலிடம்கோரும் வெளிநாட்டவர்களில் ஏனைய நாட்டவர்களைவிட இலங்கை அகதிகளே கடந்தவருடம் கூடுதலாக அரசியல் புகலிடம் பெற்றுள்ளனரென்று கனேடிய குடியேற்ற அகதிகள் சபை அறிவித்துள்ளது.

கனடாவில் அரசியல் புகலிடம் கோரும் 3791 இலங்கையர்களின் கோரிக்கை நம்பகத்தன்மை கொண்டதாக இருப்பதாக கனடிய அகதிகள் சபை அறிவித்துள்ளது

1990 ஆம் ஆண்டு 3636 இலங்கையர்களுக்கு தஞ்சம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தவருடமும் கூடுதலான அகதிகளை கனடாவே ஏற்றுக் கொண்டுள்ளது.

எனவே தஞ்சம் கோரிய வெளிநாட்டு அகதிகளின் எண்ணிக்கையில் இலங்கை அகதிகளே அதிகம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கூட்டணி குழுவின் இந்திய பயணம்

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான நிலைமைகளை எடுத்து விளக்குவதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த குழுவொன்று இந்தியா பயணம் ஒன்றை மேற்கொண்டு உள்ளது.

இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜே. என். டிக்ஸிற் ஆகியோரைப் புதுடில்லியில் வைத்து கூட்டணிக் குழுவினர் சந்திக்க உள்ளனர்.

ஜனாதிபதியுடன்கூட்டணிக் குழு நடாத்திய கலந்துரையாடல் பற்றி பி. வி. நரசிம்மராவுக்கும் ஜே. என் டிக்ஸிற்றுக்கும் எடுதது விளக்க உள்ளனர்.

எதிர்வரும் 24ஆம் திகதி நாடு திரும்பும் இவர்கள் இனப்பிரச்சினைதீர்விற்கான தெரிவுக் குழுவினரை 29ஆம் திகதி சந்திக்க உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## மாதாந்த கொடுப்பனவு

(கொழும்புத்துறை)

தீவுப்பகுதியைச் சேர்ந்த தொழுநோய், புற்றுநோய், காசநோய் உள்ள நோயாளர்களுக்கான நவம்பர், டிசம்பர் மாதங்களுக்குரிய அரச கொடுப்பனவு வேலணைப் பகுதி பிரிவுச் செயலாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகிறது

யாழ். செயலகத்தில் உள்ள இப்பகுதி அலுவலகத்தில் இக்கொடுப்பனவு தற்காலிகமாக வழங்கப்பட்டு வருகிறது. (24)

## விளையாட்டுப் போட்டி

(பருத்தித்துறை)

புலோலியிலுள்ள சுஜாதா, அருணா, வைதேகி ஆகிய மூன்றுபாலர்பாடசாலைகளும் இணைந்து விளையாட்டுப் போட்டியை இன்று 17 ஆம் திகதி புலோலி மத்தி முருகன் கோவில்மைதானத்தில் நடாத்தவுள்ளதாக பாலர் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்கள் அறிவித்துள்ளனர். (25)

## கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

''இன்றைய போர்க்கால சூழ்நிலையில் இளைஞர்கள் மதியில் பரஸ்பரம் நல்லுறவையும், சமய, சமூக சேவை மனப்பான்மையையும் வளர்க்கும் முகமாகச் சுண்டிக்குளி பாரதி இளைஞர் அறிவியற் கழகத்தினால் இளைஞர்களுக்கான புரிந்துணர்வு-ஒற்றுமை தினக் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.

அருட்திரு ஜெறோம் லம்பேட் அடிகளாரும், திரு. சிவா. சுப்பிரமணியமும் சிறப்புரைநிகழ்த்திஇளைஞர்களின் நல்வாழ்வு, வழிகாட்டல் பற்றிய ஆலோசனைகள் வழங்கினர்.

இக் கலந்துரையாடல் திரு. ஜீ ஜீ சந்திரசிறி தலைமையில் சிறபபாக நடைபெற்றது.(24)

### கம்பன் விழா

## நான்காம் நாள் நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் சழகத்தின் கம்பன் விழாவின் இறுதி நாளான இன்று காலை 9 30 மணி முதல் கடவுள் வாழ்த்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன.

வண கலாநிதி ஏ. ஜே வி. சந்திரகாந்தன் தலைமையில் நடைபெறும் இவ் இறுதிநாள் விழாவில் திரு. வே பொ. பாலசிங்கம் அவர்கள் தொடக்க உரை நிகழ்த்துவார். என்.கே. பத்மநாதன் குழுவினரின் மங்கள இசை மறறும் தவில் மேதை சின்னராசா அவர்களின் உருவப் படத்திறப்பு, அஞ்சலி உரை ஆகியனவும், ''கம்பனின் குறள் விளக்கம்'' என்னும் தலைப்பில் கருத்தரங்கும் முதல் நாள் பட்டிமன்றத் தீர்ப்பினை எதிர்த்து மேன் முறையீட்டுப் பட்டிமன்றமும் நடைபெறும்.

## சட்ட விரோத ஆயுதங்கள் செக். இல் விற்பனையாகிறது

செக்கோசெலவாக்கியாவிலுள்ள முன்னைய சோவியத் சார்பான சக்திகள் விரோதமான முறையில் ஆயுதங்களை விற்பனை செய்வதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இவ்வாறு விற்பனை செய்யப்படும் ஆயுதங்களில் கைக் குண்டுகள் முதல் ஜெட் விமானங்களைத்தாக்கும் ஏவுகணைகள் வரை அடங்குவதாக அச் செய்திகள்மேலும் கூறுகின்றன.

பிஸ்டல்கள், ஏ.கே. 47 ரகத் துப்பாக்கிகள், மற்றும் போர் டாங்கிகள்என்பனஉட்படவிற்பனைக்குதயாராகஇருப்பதாக செக்கோசெலவாக்கிய ஆயுத வியாபாரி ஒருவரை மேற்கோள்காட்டி செய்திப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதே வேளை போலந்து எல்லைக்கு சமீபமாக ஒட்டாவா என்னும் இடத்தைச் சேர்ந்த ஒருவர் போருக்கு பயன்படுததக் கூடிய உலங்கு வானூர்திகள் கூட விற்பனைக்கு இருப்பதாக கூறுகிறார்.

### 97 மன்னார் மாவட்ட

## அகதிகள் குடும்பங்கள் திருமலை வந்தன

(திருமலை)

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 97 குடும்பங்கள் திருமலை திரும்பியுள்ளனர். மன்னார் மாவட்ட பெரும் நிலப்பரப்பு மக்களை தவிர ஏனையோர் அவரவர் இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் அகதிகளை ஏற்றிய முதலாவது கப்பல் எதிர்வரும் 20 ஆம் திகதி திருமலை வந்தடைய உள்ள இந்த அகதிகள் மண்டபம் முகாமில் இருந்தவர்களில் 500 அகதிகள் இக்கப்பலில் வரவுள்ளனர். அதைத்தொடர்ந்து 22 ஆம், 25 ஆம் திகதிகளிலும் மீதிப் பேர் ஏற்றி வரப்பட உள்ளனர். ஏனையோர் 1ஆம், 3ஆம் திகதிகளிலும்திரும்பஉள்ளனர்

## தொழிலாளர் உழைப்பில் சிலர் உல்லாச வாழ்க்கை

ஆயிரம் தொழிலாளர்களின் உழைப்பில் ஐந்து நிர்வாகிகள் உல்லாச பங்களாக்களில் உண்டுறங்கி, ஊர்திகளில் சுற்றும் நிலை மாறவேண்டும். உழைப்பவர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து தரப்பட வேண்டும். அப்போதுதான் பெருந்தோட்டத்துறை செழிக்கும். நாடுஅபிவிருத்தி அடையும். ஐக்கிய தேசிய தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளர் ராஜா திவ்யராஜன் மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் கலந்து பேசும் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் சொத்து சுகங்களைப் பாதுகாப்பதற்காகத் தொழிற்சங்கங்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள் தொழிலாளர்களின் துரோகிகளாவர். அவர்களை நம்பிக் கொண்டிருக்கும் வரை தொழிலாளருக்கு விடிவும் இல்லை. விமோசனமும் இல்லை.

தோட்டத்தொழிலாளர்கள் இத்தகையவர்களை இனங்கண்டு தொழிற்சங்கங்களிலிருந்து அப்புறப்படுத்திட முன்வர வேண்டும். தொழிலாளர்களின் கஷ்டங்களை உணராதவர்கள், அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காதவர்கள் தொழிலாளர்களின் பலவீனத்தை வைத்துக் கொண்டு பொய்வாக்குறுதியளிப்பவர்கள் தொழிலாளர்களின் தலைவர்களாக இருக்க முடியாது. அவர்களை நம்பிக் கொண்டிருப்பதிலும் அர்த்தம் இல்லை எனத் தெரிவித்தார்.

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் ஒழுங்குசெய்யப்பட்ட மேற்படி உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்களின் முடிவுதிகதி 20 02-92 என அறிவிக்கப்பட்டுள்ளது. பெயர்ப்பட்டியலுடன் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களே அட்டவணை நிரலில் இடப்படும்.

மேற்படி உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி, வலிகாமம் கிழக்கு, வலிகாமம் மேற்கு, வடமராட்சி - தென்மராட்சி என மூன்று பிரிவுகளாக விலகல் முறையில் நடாத்தப்பட்டு, தெரிவு செய்யப்படும் ஆறு அணிகள் குழு நிலைப் போட்டிகள் மூலம் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப் படும்.

## பஸ்தரிப்பில் பெண்ணின் சடலம்

(மாத்தறை)

மாத்தறை பஸ்நிலையத்திலுள்ள தங்காலை பஸ்தரிப்பில் பிணமாகக் கிடந்த இனம் தெரியாத பெண்ணின் சடலத்தை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

நீல நிறசாறி அணிந்து கால்களில் வளையல் அணிந்து சுமார் 35 வயது மதிக்கத்தக்க இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்ட இப்பெண் தமிழ்ப் பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இப் பெண்ணின் கைப்பையில் இருந்து தமிழில் எழுதப்பட்ட கடிதமொன்றையும் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

## சிந்தனைக்கு

உண்மைகளைப் பதிவு செய்வதோடு மட்டும் நின்று விடாதே.
அவற்றின் மூல இரகசியத்தையும் துருவி அறிய முயற்சி செய்,

— இவான் பாவ்லவ்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 17-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# தமிழர் தேசிய பிரச்சினை ஒரு சர்வதேச விவகாரம்

தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சினையில், சமரசம் செய்வதற்கு கொமன்வெல்த் அமைப்பு ஆவலும் அக்கறையும் கொண்டுள்ளது. இது தொடர்பாக அண்மையில் யாழ்ப்பாணம் வந்த குவேக்கர்ஸ் குழுவினர் லண்டனில் கொமன்வெல்த் செயலதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடியும் உள்ளனர்.

தமிழர் தேசிய இனப் பிரச்சினையை ஓர் உள் நாட்டுப் பிரச்சினை என சிறிலங்கா அரசு தொடர்ந்து சாதிக்க முற்படுகின்றது, ஆனால்' தமிழர் தேசிய இனப்பிரச்சினை ஓர் உள்நாட்டுப் பிரச்சினை என்ற கட்டத்தை எப்பொழுதோ தாண்டிவிட்டது. இந்தியா சில மாதங்களின் முன் கூடத் தமிழர் பிரச்சினை ஓர் இந்தியாவின் தேசியப் பிரச்சினை என அறிவித்திருந்தது. ஆனால், உண்மையில். தமிழர் பிரச்சினை இன்று தென்னாசிய எல்லையையும்தாண்டி, சர்வதேச பிரச்சினையாகியுள்ளது. இதன் காரணமாகவே சர்வதேசத்தின் கவனம் குறிப்பாக மேற்குலகத்தின் கவனம் இலங்கை பக்கம் திரும்பியுள்ளது.

அண்மைக் காலத்தில் தமிழரின் தேசிய இனப் பிரச்சினையில் மேற்குநாடுகள் மிகவும் கரிசனை கொண்டுள்ளதோடு, அவற்றைத் தீர்த்து வைப்பதிலும் ஆர்வமும், அக்கறையும் கொண்டுள்ளன. இந்தஅக்கறையின் வெளிப்பாக நோர்வே, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள், இனப்பிரச்சினைத் தீர்விற்கு மத்தியஸ்துவம் வகிக்கத் தாம் தயார் என சிறிலங்கா அரசாங்கத்திற்கு கடிதம் மூலம் தெரிவித்திருந்தன. சுவிட்சலாந்தும் இது தொடர்பாக தொடர்பு கொண்டது. கனடா தனது தூதுக் குழுவினரை நேரடியாக அனுப்பி வைத்திருந்தது. ஆனால் சிறிலங்கா அரசாங்கம் இவை யாவற்றையும் புறக்கணித்து விட்டது.

சிறிலங்காஅரசாங்கம்மேற்கு நாடுகளின் மத்தியஸ்துவத்தைப் புறக்கணிப்பதற்கு குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய காரணங்கள் பல உள்ளன. இன்று மேற்குலக நாடுகள் பொதுவாக தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையையும், அவர்களின் தன்னாட்சி உரிமையையும் அங்கீகரிக்கின்றன. அத்தோடு அவை பிரிந்து சென்று சுதந்திர அரசுகளாவதற்கும் அங்கீகரிக்கின்றன. இதேவேளை இலங்கை இனப்பிரச்சினையில், மத்தியஸ்துவம் வகிக்க முன் வந்த நாடுகள் பூரண சமஷ்டி அமைப்பு முறை நிலவும் நாடுகளாகும். இந்நாடுகள் இனப்பிரச்சினைகளின் தீர்விற்கு பூரண சமஷ்டி தீர்வு சரியானதென்ற உறுதிப்பாடு கொண்டவையாகும். இந்நிலையில் அந்நாடுகளின் மத்தியஸ்துவத்தில் பேசுவது தமக்கு ஆபத்து என சிறிலங்கா எண்ணுகிறது.

மேலும், சிறிலங்கா, இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு ஒன்றைக்காணவிரும்பவில்லை பேரினவாதச் சிந்தனைகளைக் கொண்ட சிறிலங்கா அரசாங்கம் இராணுவத்தீர்வையே நாடி நிற்கிறது.

அத்தோடு, இந்தியா தென்னாசியப் பிராந்தியத்தில் தன்னை மீறி ஒரு வெளிச் சக்தி தலையிடுவதையும், தேசிய இனங்களுக்கு சுயாட்சி கிடைக்கப் பெறுவதையும், விரும்பவில்லை. இதன் மூலம் இந்திய அரசாங்கத்தின் ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராட்டங்கள் வெடிக்கும் என இந்தியா அஞ்சுகிறது. இதனால், இலங்கைத்தமிழர் விவகாரம் சர்வதேச விவகாரம் ஆவதற்கு முட்டுக்கட்டை போடுவதற்கும் இந்தியா முயற்சிக்கின்றது. சிறிலங்கா அரசாங்கமோ இந்தியாவை மீறிச் செயற்பட அஞ்சுகின்றது.

இதே வேளை, தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தும் விடுதலைப்புலிகள்மேற்குலகின் மத்தியஸ்துவத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தாம் தயாராக இருப்பதாகவும், தமிழர் பாதுகாப்பாகவும், சுயகௌரவத்துடனும், வாழக்கூடிய ஓர் தீர்வு முன்வைக்கப்பட்டால், மேற்கு நாடுகளின் மத்தியஸ்துவத்துடன் பரிசீலிக்கத் தயார்எனத் தமது நிலைப்பாட்டைத் தெளிவு படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் சிறிலங்காவும், இந்தியாவும் இணைந்து தமிழர் தேசிய இனப்பிரச்சினையை ஒடுக்க முற்படுவதையும், இனத்தை அழித்துவிட முற்படுவதையும் மேற்குலகம் புரிந்து கொள்ள வேண்டும் தடுத்து நிறுத்த முற்பட வேண்டும். தற்பொழுது கொடுப்பதை விட இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என வற்புறுத்தல்களை அதிகரிக்க வேண்டும்.

### பண்டாரநாயக்கா சிலை

# படம் பிடித்தவர்கள் கைது; கமரா, பிலிம் பொலிசாரிடம்

(கொழும்பு)

கொழும்பு காலிமுகத்திடலில் உள்ள பண்டாரநாயக்கா சிலையை படம் பிடித்த 4 தமிழ் இளைஞர்களை இராணுவத்தினர் கைது செய்து மேல் விசாரணைக்காகபொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கைதான நால்வரும் யாழ்ப்பாணம் ஏழாலையைச் சேர்ந்தவர்களாவர்.

வெளிநாடு செல்வதற்காக கொழும்பில் வந்து தங்கியதாகவும் பொழுது போக்கிற்காக காலிமுகததிடலில் வந்து படம்பிடித்ததாகவும் கோட்டைப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

பண்டாரநாயக்கா சிலை முன்னால் ஒருவர் பின் ஒருவராக மாறி மாறி இவர்கள் நின்று படம் பிடித்த போதே கைதுசெய்யப்பட்டனர்.

கமராவை பறிமுதல் செய்த பொலிசார் ''பிலிம்'' ரோலை இரகசியப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# போலிக்கடவுச் சீட்டுக்கள் டுபாயில் 4 தமிழர் கைது

(கொழும்பு)

டுபாயில் போலி கடவுச் சீட்டுக்களுடன் காணப்பட்ட நான்கு இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டு மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இவர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வந்ததும் விமான நிலையப் பொலிஸால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்த நான்கு தமிழர்களும் ஒவ்வொருவரும் தலா இரு கள்ளக் கடவுச்சீட்டுக்களை வைத்திருந்தனர் எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை போலிக் கடவுச் சீட்டுடன் குவைத் செல்வதற்கு வந்த திருக்கோணமலை, கொழும்பு. மருதானை ஆகிய இடங்களைச் சேர்ந்த வேறு இரு பெண்களும் கைது செய்யப்பட்டதாக கட்டுநாயக்கா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தொண்டமானை மட்டும் கண்டிப்பது ஏன்?

இலங்கையை சிங்கப்பூரைப் போல மாற்ற வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனா கூறினார். இலங்கையை ஜப்பானைப்போல அமெரிக்காவைப் போல ஆக்க வேண்டும் என இன்றைய ஜனாதிபதி ஒருமுறை கூறினார்.

மலையகத்தை மாலைதீவைப் போல மாற்றியமைக்க வேண்டும் என்று அமைச்சர் தொண்டமான் கூறினால் அவர் மீது கண்டனம் தெரிவிக்கிறார்கள். இது ஏன்? பெரும்பான்மை மக்கள் மத்தியில் தவறான தகவலைக் கூறி பதற்றத்தை ஏற்படுத்த முனைகிறார்கள். இதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முத்து சிவலிங்கம் றுனகலை ஒன்றிய அங்குரார்ப்பண விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் நாம் பாராளுமன்றத்திலும், மாகாண பிரதேச, கிராமோதய சபைகளில் இடம் பிடித்திருப்பது பல அரசியல்வாதிகளுக்கு அச்சத்தையும் பொறாமையையும் ஏற்படுத்தியுள்ளது. ஏதாவது குறை காண வேண்டும் எம்மைத் திட்டித் தீர்க்க வேண்டும் என்பவர்களே எமது நடவடிக்கைகளை திரித்துக் கூறிவருகிறார்கள்.

இன்று மலையக மக்கள் மத்தியில் முன்னேற வேண்டும் என்ற எழுச்சி ஏற்பட்டு வருகிறது. இந்த எழுச்சியை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டியது நமது பொறுப்பும் கடமையுமாகும் எனவும் தெரிவித்தார்.

### வவுனியாவில்

# க.பொ.த.(சா.த) விடைத்தாள் மதிப்பீட்டு நிலையம்

(வவுனியா)

வவுனியாவில் முதன் முறையாக க.பொ.த (சா.த) பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்து புள்ளி வழங்கும் நிலையம் இம் முறை ஏற்படுத்தப்பட்டது.

ஒன்பது குழுக்களைக் கொண்ட எழுபதுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இதில் கலந்து கொண்டார்கள். பரீட்சைத்திணைக்களப் பிரதிநிதி அதிகாரியாக கலந்து கொண்ட திரு சின்னத்துரை விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் முறை அதன் முக்கியத்துவம் போன்ற விடயங்கள் குறித்து ஆசிரியர்களுக்கு தெளிவுபடுத்தினார்.

### ஐ. ஐ. தேசிய முன்னணி

# செயலாளர் நாயகமாக பிரேமச்சந்திரா தெரிவு

(கொழும்பு)

ஐ.தே.க அதிருப்தியாளர்களின் புதிய கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் செயலாளர் நாயகமாக முன்னாள் தொழிலமைச்சர் ஜி எம் பிரேமச்சந்திரா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கட்சித் தலைவராக சி குணரத்னாவும் சிரேஷ்ட உதவித் தலைவர்களாக முன்னாள் அமைச்சர்களான காமினி திஸநாயக்காவும் அத்துலத்முதலி ஆகியோரும் தெரிவாகியுள்ளனர்.

உதவி தலைவர்களாக முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டீ மெல்லின் பாரியார் மல்லிகா டீ மெல். ரியன்சி ஜயவர்த்னா, சரத் அமுனுகம. ரி. எம். இஸ்மாயில், நந்தன மெண்டிஸ் உட்பட அறுவரும், உதவிச் செயலர்களாக ஐவரும் தெரிவு செய்யப்பட்டனர்

கட்சியின் முதல் கூட்டம், மஹரகமையில் எதிர் வரும் 29 ஆம் திகதி நடைபெறலாம் என ஜி எம். பிரேமச்சந்திரா கூறியுள்ளார்.

### தோட்டங்கள் அழிக்கப்படுவதை

# நிறுத்தக் கோரி தொழி. வேலை நிறுத்தம்

(மாத்தளை)

புதிதாக தேயிலைச் செடிகளை பயிரிடுவது என்ற போர்வையில் ஏற்கனவே உள்ள தேயிலைத் தோட்டங்கள் அழிக்கப்பட்டு வருவதை நிறுத்துமாறு கோரி ரத்தோட்ட பகுதியிலுள்ள மூன்று தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 300 தொழிலாளர்கள் கடந்த திங்கட்கிழமை முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கட்டாரந்தன்ன, பெரியதங்கந்த, சின்னத்தங்கந்த ஆகிய தோட்டங்களிலேயே வேலை நிறுத்தம் நடைபெறுகிறது

தேயிலைச் செடிகள் பிடுங்கி அழிக்கப்படுவதை தடுத்து நிறுத்துமாறு இ. தொ. கா. ரத்தோட்ட பிரதேச சபைத் தலைவர் எஸ். சுகுமாரன் மாநில பிரதிநிதி எஸ். சிவலிங்கம், மாவட்டத் தலைவர் பொன்னுசாமி ஆகியோர் தோட்ட நிர்வாகிகளைச் சந்தித்து கேட்டுக் கொண்டுள்ளனர்.

உலக வங்கி கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே அரச பெருந்தோட்டலாக்கம் இந்த உத்தரவை தமக்குவிடுத்ததாகவும் எனவே இது சம்பந்தமாக என்னால் எதுவும் செய்ய இயலாது எனவும் தோட்ட நிர்வாகி கைவிரித்துள்ளார்.

எனவே இந்தப் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும் வரை வேலை நிறுத்தம் செய்யப் போவதாகத் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

### பரீட்சை

(கொழும்புத்துறை)

பொது எழுதுநர் சேவையின் தரம் IIஆம் வகுப்பின் ''அ'' பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுக்கானவினைத்திறமை காண் தடைப் பரீட்சை இம்மாதம் 22ஆந் திகதி (22-2-92) சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (24)

# தொண்டர் ஆசிரி. நியமனம்; நிபந்தனைகளை தளர்த்துக

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர ஆசிரியர்களாக்குவதற்கு அரசாங்கம் விதித்துள்ள நிபந்தனைகளை மீள் பரிசீலனை செய்யுமாறு கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் திரு. எம் எஸ். செல்லச்சாமி ஜனாதிபதி பிரேமதாசாவை கடிதமூலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# 100 இலங்கை பெண்கள் மீது லிபியாவில் துன்புறுத்தல்

(கொழும்பு)

லிபியாவில் நூற்றுக்கும் மேற்பட்ட இலங்கைப் பெண்கள் அவர்களது விருப்பத்திற்கு மாறாகத் துன்புறுத்தப்பட்டதாக புகாரிடப்பட்டுள்ளது. இப் புகார் குறித்து விசாரிக்க எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் இருக்கும் இலங்கைத் தூதுவர் லிபியத் தலைநகர் திரிப்போலிக்குப் பயணமாகியுள்ளார். இப் பெண்கள் அவர்களது அரபு வேலைகொள்வோரினால் துன்புறுத்தப்பட்டுள்ளனர் என்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் வெளிவிவகார அமைச்சும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமும் தெரிவித்துள்ளன.

கெய்ரோவிலுள்ள இலங்கைத் தூதுவர் வீரக்கோன், திரிப்போலியில் சில தினங்கள் தங்கியிருந்து லிபிய அதிகாரிகள், தொழில் கொள்வோர் மற்றும் முகவர்களோடு தொடர்பு கொண்டு இப் பெண்கள் துன்புறுத்தப்பட்டமை தொடர்பான தகவல்களைப் பெறவுள்ளார் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் கூறியுள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் திரட்டப்பட்டு லிபியாவிற்கு அனுப்பிவைக்கப்பட்ட முதலாவது பெண்கள்தொகுதியினர் துன்புறுத்தப்பட்டுள்ளமை அபிப்பிராய பேதங்களால் ஏற்பட்டு விட்டதாக பணியகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## உண்ணாவிரதிகள் ஆஸ்பத்திரியில் அனுமதி

(சென்னை)

தமிழ்நாடு செங்கல்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தில் புழல் விசேட முகாமில் சாகும் வரை உண்ணாவிரதப்போராட்டத்தை மேற்கொண்டுவந்த ஐந்து தமிழ் அகதிகள் கடந்த புதன்கிழமை ஸ்ரான்லி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அரசியல் கைதிகள் என தங்களைக் கருதி ஒரு பண்பான வாழ்க்கைக்கு தம்மை அனுமதிக்க வேண்டும் என்று கோரியே அவர்கள் உண்ணாவிரதம் இருந்து வந்தனர்.

உடல்நிலைமோசமாகியதை அடுத்து இவர்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## மன்னாருக்கு அகதிகள் புறப்படுவதில் தாமதம்

(சென்னை)

மண்டபம் முகாமிலிருந்து தலைமன்னாருக்கு நாளை புறப்பட இருந்த தமிழ் அகதிகளின் முதல் தொகுதியினர் வரும் வியாழனன்றே புறப்படுவர் என இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆதிசேஷையா தெரிவித்துள்ளார்.

இவர்களை ஏற்றிவரவிருந்த ராமானுஜம் என்னும் கப்பல் அந்தமான் தீவுகளிலிருந்து நாளையே இராமேஸ்வரத்திற்கு வந்துசேரும் எனவும் இதனாலேயே இந்தத் தாமதம் ஏற்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கிராமிய உழைப்பாளர் சங்க அமைப்புக் குழு தெரிவு

(யாழ்ப்பாணம்)

கிராமிய உழைப்பாளர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கவும் கிராமிய உழைப்பாளர்கள் சங்கம் ஒன்று உருவாக்கப்பட இருக்கிறது.

இச் சங்கத்தை அமைக்கும் முயற்சியின் ஆரம்பக் கட்டமாக அமைப்பாளர் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டிருக்கிறது நேற்று மாலை2-00 மணியளவில் உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இக் குழு தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி மற்றும் திரு மூர்த்தி, திரு. தங்கணா, வலிகாமம், வடமராட்சி. தென்மராட்சி, ஆகிய பகுதிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்களும் கலந்துகொண்டனர். மிகவிரைவில் மேற்படி சங்கம் அமைக்கப்பட இருக்கிறது.

### யாழ். நகர்

இவர்கள் கொட்டடி, கண்ணாபுரம், நாவாந்துறை, பொம்மைவெளிப் பகுதிகளை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேபகுதிகளைச் சேர்ந்த மற்றுமொரு தொகுதி பொது மக்கள் யாழ் இந்துக் கல்லூரியில் தஞ்சமடைந்தனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் தாக்குதல் நிலைஅடங்கியதும் தத்தமது இல்லங்களுக்குத் திரும்பிச் சென்றனர்.

அதேவேளை குருநகர் பகுதி மக்கள் புனித யாகப்பர் ஆலயம், அடைக்கலமாதா தேவாலயம் சம்பத்திரிசியார்கல்லூரி போன்றவற்றில் தஞ்சமடைந்தனர் இவர்களும் பிற்பாடு வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர். (21)

## அமைச்சர் ரஞ்சன் நினைவுக் கொண்டாட்டம்; தோட்டத்தில் பண வசூல்

(ஹற்றன்)

கடந்த வருடம் மார்ச்இரண்டாம் திகதி குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டஅமைச்சர் ரஞ்சனின் நினைவு தினம் கொண்டாடப்பட உள்ளது இதற்குத் தோட்டத் தொழிலாளர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் இரண்டு ரூபாமுதல் ஐந்துரூபா வரை அறவிட்டு அனுப்பும்படி நுவரெலியா பிராந்திய ஜனவசம தலைவர்தோட்டங்களுக்கு அனுப்பியுள்ள சுற்று நிருபம் ஒன்றில் கேட்டுள்ளார்.

தோட்ட உத்தியோகத்தர்களும் நிர்வாகிகளும் தம்மால் இயன்றளவு தொகையை அனுப்பி வைக்கும் படியும் கேட்டுள்ளார்.

அண்மையில் இது தொடர்பாகபெருந்தோட்டத்தொழில் துறை அபிவிருத்தி அமைச்சர் ரூபாகருணதிலக தலைமையில் நடைபெற்ற ஜனவசமகூட்டுத்தாபன பிராந்தியத் தலைவர்கள் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக சுற்று நிருபத்தில் மேலும் கூறப்பட்டுள்ளது.

### 3,00 பாடசாலை

டங்கள் இப்பாடசாலைகளில் பற்றாக் குறையாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. நிரந்தர அதிபர்கள் நியமிக்கப்படாததும் பாடசாலைகளை மூடுவதற்கான முக்கிய காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு இந்தப்பாடசாலைகளுக்கான தேவைகளை நிவர்த்தி செய்யுமாறு சங்கம் கல்வி அமைச்சரைக் கேட்டுள்ளது.

### வீரச்சாவு

தமிழீழ விடுதலைப்புலிகளால் சிறிலங்கா இராணுவ அணி மீது மேற கொள்ளப்பட்ட தாக்குதலின்போது காயமடைந்த லெப்ரினன்ட் ஈழமணி (மு: மனோகரன் கலுவாஞ்சிக்குடி) சனியன்று பிற்பகல் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.


## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு
வளர்மதி சனசமூக நிலையம்
மானிப்பாய் வடக்கு

1 ஆம் பரிசு இல: 0993
2 ஆம் பரிசு இல: 1251
3 ஆம் பரிசு இல: 1560

ஆறுதல் பரிசுகள் இல: 1950, 1974, 1189, 0607, 0912

மேற்குறிப்பிட்ட இலக்க சீட்டுக்களை வைத்திருப்போர் உடனடியாக செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

(2215) - செயலாளர்


## அரச புடைவை நிலையங்கள் தனியார் மயமாகின்றன

(கொழும்பு)

புடைவை மொத்தவிற்பனை நிலையமான சலுசலாவும் அதன் 24 மொத்த சில்லறை விற்பனை நிலையங்களும் இந்த ஆண்டில் தனியார் மயமாக்கப்படவுள்ளன என்று புடைவை மற்றும் கைத்தொழில் அமைச்சர் யு. பி. விஜெயக்கோன்தெரிவித்தார்.

வியாங்கொடை புடைவை ஆலையும் மூன்று மாதங்களுக்குள் தனியார் துறையிடம் கையளிக்கப்படும் என்று கிராமோதய நிலையத்தில் செய்தியாளர் கூட்டத்தில் பேசும் போது அமைச்சர் தெரிவித்தார்.

மட்டகம நூல் ஆலையையும் தனியார் வசம் ஒப்படைப்பதற்கான பேரம் நடைபெறுவதாகவும், அதுவும் வெகுவிரைவில் தனியார்மயமாக்கப்படவுள்ளதுஎன்றும் அமைச்சரினால் செய்தியாளர்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

துல்கிரிய, பூகொட புடைவை ஆலைகள் 1990-இல் தனியார் துறையிடம் கையளிக்கப்பட்டன.

நாட்டை நிர்வகிப்பதுதான் அரசின் வேலை. வியாபாரத்தில் நேரடியாக ஈடுபடுவது அரசின் பணியாகாது என்று விளக்கிய அமைச்சர், அனுராதபுரத்திலும், காலியிலுமுள்ள மின்தறிகள் விற்பனைக்காக விளம்பரப்படுத்தப் பட்டுள்ளன என்று சொன்னார்.

சிறிலங்காவிலிருந்து ஆடைகளை இறக்குமதி செய்யும் நாடுகளான கனடா, அமெரிக்கா, நோர்வே, பின்லாந்து ஆகிய நாடுகள் தமது கோட்டாவைக் குறைத்துள்ளதால், புடவைத் தொழிலை மேலும் விஸ்தரிப்பதற்கு இதுதடையாகவுள்ளதாகவும் அமைச்சர் யு.பி. விஜெயக்கோன் செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

## அம். உள்ளூராட்சி தேர்தல்; ஒத்திப் போடக் கோரிக்கை

(அம்பாறை)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இயல்பு நிலை தோன்றி மக்கள் அனைவரும் மீளக்குடியமரும்வரை அரசு உத்தேசித்துள்ள அம்பாறை மாவட்ட உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களை ஒத்திப்போட வேண்டும். இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை அம்பாறை மாவட்ட தமிழ் மகாசபை சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரில் மேலும், 1990 ஜூன் மாதத்தில் சம்மாந்துறைத் தொகுதி தமிழ் மக்கள் அனைவரும் இடம் பெயர்ந்துபொத்துவில், கல்முனைத் தொகுதிகளிலும், மட்டக்களப்பு மாவட்ட அகதிகள் முகாம்களிலும் நண்பர்கள் உறவினர் வீடுகளிலும் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் கிராமத்தில் வாழ்ந்த அனைத்து தமிழ் மக்களுமே கோமாரியில் அகதிகளாக இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் மீளக்குடியமர்த்தப்பட்டு பழைய சமூக வாழ்க்கைக்குத்திரும்புமுன்னர் அம்பாறை மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களை அரசு நடாத்தமுற்படுவது தமிழ் மக்களின் அரசியல் உணர்வுகளை மறுக்கும் புறக்கணிப்பதாகவே கருதப்படும்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வரும் புதிய தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளான கல்முனை தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு, சம்மாந்துறை தமிழ் உ.அ.அ பிரிவு, கோமாரி உ.அ.அ பிரிவு என்பன இன்னும் ஏற்படுத்தப் படவில்லை.

நாட்டின்ஏனைய பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் புதிய பிரதேச சபைகளும் உருவாக்கப்பட்டன ஆனால்அம்பாறை மாவட்டத் தமிழ்ப் பகுதி மட்டும் இந்த விடயத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஏயர் பஸ் கொள்வனவு; சு.கட்சி எம்.பி. கண்டனம்

(கொழும்பு)

ஏயர் பஸ் என்று அழைக்கப்படும் பயணிகள் சிறிய விமானங்கள் ஆறினை ஏயர் லங்கா 700 மில்லியன் அமெரிக்க டாலர் (2,800 கோடி ரூபா) செலவில் கொள்வனவு செய்வதற்கு எதிராகத் தீவிர இயக்கமொன்றைமற்றக் கட்சிகளுடன் சேர்ந்து நடாத்தக் கொழும்பு மாவட்டசிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் சி. வி. குணரெட்ணா அழைப்பு விடுத்துள்ளார்.

நாடு ஒரு நிதி நெருக்கடியில் உள்ள இந்த வேளையில் ஏயர் லங்கா நிறுவனம் பொதுப்பணத்தைஇப்படி அநியாயமாகச் செலவு செய்வதை 'மிகக் கடுமையாக' எதிர்க்க வேண்டும்என்றுகுணரெட்ணா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அரசு நிதி நெருக்கடி காரணமாக அத்தியாவசிய பொருள்களுக்கு வழங்கப்பட்ட மானியத்தை வெட்டி, மக்கள் சுமக்க முடியாத அளவுக்குப் பண்டங்களின் விலையை உயர்த்தி மக்களைக் கஷ்டப்படுத்துவதுடன்-

துரிதப்படுத்தப்பட்ட மகாவலித்திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகைக்கு ஈடானது இந்த ஆறு ஏயர்பஸ்களைக் கொள்வனவு செய்வதற்கு செலவு செய்யப்படவுள்ள பணம் என்றும், இது விடயமாக பெப்ரவரி 6ஆம் திகதி, பாராளுமன்றத்தில் ஒத்திவைக்கப்பட்ட கேள்வி நேரத்தில் தான் கேள்வி எழுப்பியுள்ளதாகவும் அவர் அக்கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

### இடைநிறுத்த

டெய்லிநியூஸ் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரை குறித்துப் பிறகு அவரிடம் விளக்கம் கோரப்பட்டது.

### 4 கிராமங்கள்

பெறுமதியான பொருள்கள் சேதமாக்கப்பட்டன.

இதேவேளை கடந்த 10ஆம் திகதி உப்பூறல் என்னும்இடத்தில் இராணுவத்தால் சுட்டுக் காயப்படுத்தப்பட்ட கந்தவனம் கணேசலிங்கம் என்பவர் வியாழனன்று மரணமானார்.

மேலும் கிளிவெட்டி, சம்பூர் ஆகிய கிராமங்களில் நேற்றுக் காலை சிறிலங்கா இராணுவத்தால் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஹெலித்தாக்கு

பளை, கெரம்பிடி ஆகிய பகுதிகளில் நேற்று முன் தினம் பகல் சிறிலங்கா உலங்குவானூர்தியொன்று 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியிலிருந்து எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஜேர்மன் வீராங்கனைகளுக்கு தடை

ஜேர்மனியை சேர்ந்த ஓட்ட வீராங்கனை கப்டன் கிராபே போதையூட்டும் மருந்துகளைப் பாவிப்பதாக திரும்பத் திரும்பக் குற்றம் சாட்டப்பட்டதைத் தொடர்ந்து, நான்காண்டுகளுக்குத்தேசிய மற்றும் சர்வதேசப் பந்தயங்களில் பங்கேற்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அவரது ஓட்ட அணித் தோழர்களான கிறீட் பிரர்வோஸ் சிபி மாஸ்வோர் ஆகியோருக்கும் பந்தயங்களில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

### யாழ். வந்து

குவேக்கர்ஸ் சமாதானக்குழுவினரிடம் விடுதலைப்புலிகள் தெரிவித்திருப்பதாக அறிய வருகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.